[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உறையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு.

சில கைதிகள் சென்னை சிறையிலிருந்து, பட்டுக்கோட்டை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும்போது, மாமண்டூரில் தப்பிச் சென்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, என்ன பிரச்சினையைக் கிளப்புகிறீர்கள் ? இரண்டு பிரச்சினைகள் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மதுராந்தகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை மத்திய சிறைச் சாலையிலிருந்து நான்கு கைதிகளை காவலர்கள் அழைத்துச் சென்றபோது, மாமண்டூரில் உணவு விடுதியில் அவர்கள் உணவு அருந்துவதற்காக, அந்த வண்டியை அங்கே நிறுத்தி உணவு அருந்தச் சென்ற நேரத்தில் ஏ.கே. 47 துப்பாக்கியோடு அம்பாசிடர் காரில் வந்திருக்கிற விடுதலைப் புலிகள் அவர்களில் ஒரு காவலரை துப்பாக்கியால் சுட்டு அந்த இடத்திலேயே அவர் இறந்து போய் இருக்கிறார். மற்ற மூன்று பேரையும் கடத்திச் சென்றிருக்கிறார்கள். அந்தக் காவல் துறையைச் சார்ந்திருக்கிற ஒரு ஏட்டு மட்டும், அவர் ஒருவர் மட்டும், கொண்டு சென்றிருக்கிற அந்தக் கைதியைப் பிடித்து வைத்திருந்து, பல்வேறு காயத்திற்கு ஆளாக்கப் பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் நான்கு கைதிகளை அழைத்துச் செல்லக் கூடிய காவல் துறை போதுமான பாதுகாப்பு இல்லாமலும், அதுவும் தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகளே இல்லை யென்று சொல்லக்கூடிய வகையில் பலதடவை நீங்கள் அறிவித்த போதும், இன்றைக்கு விடுதலைப் புலி, அவர்களுடைய ஆதரவோடு துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட நிலைமை

தமிழகத்திலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தடவையும், இதே சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர்களும், பல உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு, விடுதலைப் புலிகளே இல்லை யென்று சவாலாகக் கூறி வரும் நேரத்தில் இந்த தினத்தில் காவல் துறையினரை சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு உரிய நடவடிக்கை என்ன எடுக்கப்படுகிறது. என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். அதே போன்று இறந்து இருக்கின்ற காவல் துறையினருக்கு, சமீபத்தில் வீரம் புரிந்திருக்கின்ற அந்தக் காவல் துறை யினருக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற அந்த நிதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்பு சாமி அவர்களும் இதே போன்ற ஒரு பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி 9-20 மணிக்குத்தான் செயலாளரிடம் உங்களுடைய அறிவிப்பைக் கொடுத்தீர்கள். வழக்கமாக இது போன்ற பிரச்சினைகளைத் திடீரென்று இந்த அவையில் எழுப்ப வேண்டுமானால் ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையிலே நானே கூட மறுத்தேன். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்தகைய அறிவிப்பைத் தாங்கள் கொடுத்திருக் கிறீர்கள் என்பதைத் தெரிவித்தவுடன், "அதற்குரிய பதிலை நான் வழங்குவதற்கு, அதற்குரிய விவரங்களையெல்லாம் கேட்டறிந்து இருக்கிறேன்" என்று அவர்கள் தெரிவித் திருக்கிற காரணத்தால் இன்று இப்பிரச்சினையை அவையிலே எழுப்ப அனுமதித்தேன். இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம், மிகக்குறுகிய இடைவெளியில் நீங்கள் அறிவிப்பைக் கொடுத்தாலும்கூட, அதற்கு அரசாங்கம் எந்த நேரத்திலும் பதில் சொல்லத் தயங்கவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி); விதிமுறைகள் இடம் கொடுக்காவிட்டாலும், நானும் அனுமதித்திருக்கிறேன்; அரசும் பதில் சொல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள லாம். மாண்புமிகு முதலமைச்சர். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: 1/2 மணி நேரம் முன்னால் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது விதி 56. இது ஸ்பெஷல் மென்சன். நீங்கள் சொல்வது ஒத்திவைப்புத் தீர்மானம். ஸ்பெஷல் மென்சன் என்பதற்கு விதிகளிலே இடம் இல்லையென்றாலும்கூட ஒரு மணிநேரத்திற்கு முன்னர் கொடுத்தால் எடுத்துக் கொள் கிறேன் என்று நானே சொல்லியிருக்கிறேன். அதிலே தான் இப்போது நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதிலேயே

குழப்பம் வேண்டாம். ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுத்திருக்க வேண்டும். இருந்தாலும் இன்றைக்கு அரசாங்கமே, நாங்கள் பதில் சொல்கிறோம் என்று முன் வந்திருக்கிற அந்த வேகத்தை நீங்கள் பாராட்ட வேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சேது பாவாச்சத்திரம் காவல் நிலைய குற்ற எண். 180/90-ல் இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவுகள் 147, 148 மற்றும் ஆயுதச் சட்டப்பிரிவு 25, பாஸ்போர்ட் சட்டப்பிரிவு 20 மற்றும் தொலை தொடர்புத் தந்தி சட்டப்பிரிவு 3 ஆகிய வற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப் பட்ட எதிரிகளாக கிருபன், சந்திரன், ரவி மற்றும் விக்டர் ஆகியோர் உள்ளனர். 30—4—1993 அன்று பட்டுக் கோட்டை நீதிமன்றத்தில் இவர்களை ஆஜர்படுத்த நீதி மன்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. சென்னை சிறையில் இருந்த இக்குற்றவாளிகளை 29—4—1993 அன்று இரவு சுமார் 8 மணி அளவில் சிறைத்துறையினர் அழைத்துச் செல்ல சென்னை நகர காவல் துறையினர் எஸ்கார்ட் பார்ட்டியிடம்—வழி காவல் குழுவினரிடம்—ஒப்படைத்தனர். வழி காவல் குழுவில் ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் கோபால், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 3 காவலர்கள் இருந் தனர். இக்குழுவிற்கு டி.என். 01-0383 எண் கொண்ட ஒரு மூடிய காவல்துறை லாரி வழங்கப்பட்டது. இந்த லாரியின் ஓட்டுநராக தலைமைக் காவலர் சக்கரவர்த்தியும், அவருக்கு உதவியாக ஒரு உதவியாளரும் இருந்தார்கள். இந்தக் குழுவிடம் கைவிலங்கு, ஒரு கைத்துப்பாக்கி, இரண்டு துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டிருந்தன. இவர்கள், கைதி களுடன் 29—4—1993 அன்று இரவு 9 மணிக்குப் புறப் பட்டு பட்டுக்கோட்டை நோக்கிச் சென்றனர். சுமார் 10-30 மணியளவில் மாமண்டூரை அடைந்தனர். சாலை ஓரத்தில் இருந்த பிஸ்மில்லா ஓட்டல் என்ற உணவகத்தின் அருகில் இடதுபுறம் லாரியை நிறுத்திவிட்டு இரவு உணவுக் காகக் கைதிகளை ஓட்டலுக்கு அழைத்துச் சென்றனர். வழி காவல் குழுவினர் கைவிலங்குகளைப் பயன்படுத்த வில்லை. ஆயுதங்களையும் வண்டியிலேயே வைத்து விட்டனர். ஒரு காவலரை மட்டும் வண்டியில் காவல் வைத்துவிட்டு மற்ற காவலர்கள் கைதிகளை அழைத்துக் கொண்டு சாலையைக் கடந்து ஓட்டலுக்குச் சென்றனர். அங்கு சென்று உணவருந்திவிட்டு வண்டிக்குத் திரும்பும் போது டி.என்.க்யூ. 641 என்ற எண்ணுள்ள வெள்ளை

நிற அம்பாசிடர் கார் லாரிக்கு பின்பக்கம் வந்து நின்றது அதிலிருந்த ஒருவன், சாலையைக் கடந்து ஓட்டலில் இருந்து லாரியை நோக்கி வந்துகொண்டிருந்த காவலர்களை நோக்கிச் சுட்டான். அவன் பயன்படுத்தியது ஆட்டோ மேட்டிக் ஆயுதமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சம்பவ இடத்திலேயே 11 காலித் தோட்டாக்கள் கிடந்தன. துப்பாக்கியால் சுட்டதில் காவலர் மோகன் இறந்து போனார். காயமுற்ற தலைமைக் காவலர் சக்கரவர்த்தி செங்கற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். காவல் கைதிகளாக இருந்த எதிரிகள் கிருபன், ரவி, சந்திரன் ஆகியோர் தப்பி, வந்திருந்த காரில் ஏறிக்கொள்ள கார் அந்த இடத்தைவிட்டு விரைந்தது. விக்டர் என்ற கைதி மட்டும் தப்ப இயல வில்லை. மேற்கொண்டு நடைபெற்ற விசாரணையில், அம்பாசிடர் காரின் எண். டி.என்.க்யூ. 641 என்பது தவறான எண் என்றும், அது இரு சக்கர வாகனத்தின் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால் நேற்றிரவே அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர்களிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தப்பி ஓடிய காவல் கைதிகளைப் பிடிக்க தக்க அறிவுரை களை வழங்கியுள்ளார். கூடுதல் காவல்துறை இயக்குநர் திரு. தேவாரம் நேற்றிரவே சம்பவ இடத்திற்கு விரைந் துள்ளார். தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, டேன்சிட், காவல் துறை தலைவர் திரு. பந்த் தஞ்சை கடலோரப் பகுதிக்கு விரைந்துள்ளார். மாநிலம் முழுவதும் காவல் துறையினர் உஷார்படுத்தப்பட்டு உள்ளனர். தப்பி ஓடிய காவல் கைதிகளில் கிருபன் என்பவன் பத்மநாபா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளி.

முற்பகல் 11-20

இதற்கிடையில் நேற்று இரவு திருக்கழுகுன்றம் காவல் நிலையத்தில் ஆனந்தகுமார் என்பவர் கொடுத்த புகாரில், நேற்று இரவு அவர் மகாபலிபுரம் நோக்கி டி.எம்.ஓ. 9419 என்ற எண் கொண்ட அம்பாசிடர் காரில் சென்றுகொண்டிருந்தபோது திருவிடந்தை அருகே தங்கள் மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட்டது என்று கூறி, நால்வர் காரில் ஏறி மகாபலிபுரம் வரை செல்ல அனுமதி கோரியதாகவும், அதற்கு இசைந்து அவர்களை தான் ஏற்றிச் சென்றதாகவும், போகும் வழியில் எச்சூர் என்ற இடத்தில் காரை நிறுத்தச் சொல்லி, தான் இறங் கியதும் அவர்கள் காரை கடத்திச் சென்றதாக கூறியுள் ளார். இந்தத் தகவலும் அனைத்து மாவட்ட காவல் துறையினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தப்பி ஓடிய காவல் கைதிகளையும், அவர்களை விடுவித்தவர்களையும் பிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. காவல்துறை அலுவலர் (I.G.P. TANSIT) திரு. பந்த் இந்த வழக்கை விசாரிக்கவும், நடவடிக்கைகள் எடுக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்திற்கு பொறுப்பானவர்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப் படுவார்கள். இந்தியத் தண்டனைச் சட்டப்படியும் இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட காவல்துறை உயர் அதிகாரிகள் ஏ. சி. (ஹெட் குவார்ட்டர்ஸ்) திரு. கிங்ஸ்டன் டேவிட் மற்றும் டெபுடி கமிஷனர் (ஆர்ம்டு ரிசர்வ்) திரு. பி.பி.கே. சிங் ஆகியோர் மீதும் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதில் ஏதோ ஒரு சதித்திட்டம் இருக்கின்றது என்று இந்த அரசு ஐயுறுகிறது. ஆகவே இச்சம்பவம் குறித்து விசாரிக்க சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களைக் கலந்தாலோசித்து ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை நடைபெறும் என்று சொல்லியிருக் கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூகத்தின் பேரில் மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னால், விசாரணை நடைபெறுவதற்கு முன்பே அதை நான் எப்படி ஊர்ஜிதப் படுத்த முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதற்கு நாங்கள் உத்தேசித்து இருக்கிறோம் என்று தெரிவிக்கின்றபோது, எல்லாமே அந்த விசாரணையில் தானே வரவேண்டும்.